செ. கு. எண்:79 நாள்:21.03.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.3.2013

திருப்பூர் மாவட்டம், ஊதியூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.பிரபாகரமணி அவர்கள் 18.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், கவரைப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.மணிவண்ணன் அவர்கள் 19.3.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் பிரபாகரமணி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் மணிவண்ணன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் பிரபாகரமணி மற்றும் மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் மணிவண்ணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**